நஷ்டஈடு கொடுக்க வேண்டும். அதாவது 'for every permit acquired under this Act' என்ற பிரிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவை யெல்லாம் தெளிவாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் திருத்தத்தை வற்புறுத்தவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The amendments of Thiru K. T. K. Thangamani were put and lost.

The Government amendment was put and carried.

The Schedule, as amended, was put and carried.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டாவது பிரிவுக்கு திரு. கே. எம். சுப்பிரமணியத்தின் திருத்தத்தை அவை ஏற்றுக் கொள்ளாத தால் இத்திருத்தம் முன்மொழிய அனுமதிக்கப்படவில்லை.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I move—

"That the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Bill 1971 (L. A. Bill No. 35 of 1971), as amendment, be passed"

The motion was put and carried and the Bill, as amendment, was passed into law.

(6) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 'நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள (2) என்ற பொருளுக்குப் பதிலாக, (4) என்ற பொருளை முதலாவதாக எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (நான்காவது திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.